DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF PROCEDURE)

IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| Name | தங்கம் | Village | சிக்கணாங்குப்பம் |
|---|---|---|---|
| Father's Name | சிங்காரம் | Taluk | வாணியம்பாடி |
| Age | 60 | Calling | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **10.04.2026**

**O.S. No. 126/2018** **வா.சா.2** **01.20 PM – 01.27 PM**

**குறுக்கு விசாரணை –**

1. நான் வாதி வெங்கடேசன் அழைத்ததன் பேரில் சாட்சி மளிக்கிறேன் என்றாலும் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை எதுவும் வரவில்லை என்றாலும் சரிதான். வழக்கு சொத்தானது யாருக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் வாதி இருவது வருடமாக அங்கு தான் இருக்கிறார் யாருக்கு பாத்தியம் என்று எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் என்ன அமைந்துள்ளது என்றால் வாதியின் வீடு கட்டியுள்ளார். வாதி வழக்கு சொத்தில் வீடு கட்டும் சமயம் முறையாக அனுமதி பெற்று கட்டினாரா என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு குறித்த விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் நான் அதே பகுதியை சார்ந்தவன் தான் அதனால் தெரியும்.

2. வாதி வீடு கட்டி எவ்வளவு நாட்கள் இருக்கும் என்றால் சுமார் 25 ஆண்டுகள் இருக்கும். வாடி என் வீட்டிற்கு முன் பகுதி வாணியம்பாடி லிருந்து திம்மாம்பேட்டை வரை செல்லும் தார் சாலை அமைந்துள்ளது என்றால் சரிதான். வாதியின் வீட்டிற்கும் தார்சாலைக்கும் இடையே எத்தனை அடி அகலம் இருக்கும் என்றால் சுமார் 10 அடி இருக்கும்.

3. வாதி வீடு கட்டியுள்ள நிலமானது அரசாங்கத்திற்கு பாதிக்கப்பட்ட நிலம் என்றாலும் அரசாங்கம் கோரும் சமயம் திரும்ப கொடுக்க வாதி கடமைப்பட்டவர் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி

கட்டியிருக்கும் வீட்டிற்கு உண்டான நிலத்திற்கு பட்டா கோரி ஏதேனும் தாக்கல் செய்து உள்ளாரா என்றால் மின் இணைப்பு மற்றும் குடிநீர் குழாய் பெற்றுள்ளார், பட்டா கோரி விண்ணப்பித்தாரா என்பது குறித்து எனக்கு தெரியவில்லை. ஒன்றாம் வாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் பங்காளி ஆவார். வாதி எனக்கு வேண்டிய பட்டவர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க தவறாக சாட்சி மன்னிக்கிறேன் என்றால் சரியல்ல.

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாணியம்பாடி,